# எண் பிரிப்பு

வணக்கம் மாணவர்களே,

இன்று நாம் எண் பிரிப்பு தொடர்பாக பார்க்கவிருக்கிறோம்.

நாம் முதல் பாடத்தில் இட மதிப்பு மற்றும் இலக்க மதிப்பு தொடர்பாக படித்தோம்.

கீழே உள்ள இட மதிப்பு அட்டவணையைப் பாருங்கள்.

| நூறாயிரம் | பத்தாயிரம் | ஆயிரம் | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|---|---|
| | | | 3 | 4 | 7 |

அட்டவணையில் 347 என்ற எண் எழுதப்பட்டுள்ளது.

அந்த எண்ணை நாம் இட மதிப்பு மற்றும் இலக்க மதிப்பிற்கு ஏற்ப பிரித்து எழுத முடியும்.

347ஐ இட மதிப்பிற்கு ஏற்ப பிரித்து எழுதினால் :

347 = 3 நூறு + 4 பத்து + 7 ஒன்று

347ஐ இலக்க மதிப்பிற்கு ஏற்ப பிரித்து எழுதினால் :

347 = 300 + 40 + 7

மேலும் ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம்:

| நூறாயிரம் | பத்தாயிரம் | ஆயிரம் | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|---|---|
| 5 | 9 | 2 | 8 | 6 | 4 |

592 864 ஐ இட மதிப்பிற்கு ஏற்ப பிரித்து எழுதினால் :

592 864 = 5 நூறாயிரம் + 9 பத்தாயிரம் + 2 ஆயிரம் + 8 நூறு + 6 பத்து + 4 ஒன்று

592 864 ஐ இலக்க மதிப்பிற்கு ஏற்ப பிரித்து எழுதினால் :

592 864 = 500 000 + 90 000 + 2 000 + 800 + 60 + 4

எண் பிரிப்பு தொடர்பாக மேலும் அறிந்து கொள்ள கீழ்க்காணும் செவ்வகத்தைக் 'கிளிக்' செய்து இணைக்கப்பட்டுள்ள காணொளியைக் காண்க:

எண் பிரிப்பு தொடர்பாக நன்கு புரிந்துகொண்ட பின் கீழ்க்காணும் பயிற்சியைச் செய்க.

**பயிற்சி**

அ. கீழ்க்காணும் எண்களை இட மதிப்பிற்கேற்ப பிரித்து எழுதுக:

எ.கா:

56 803 = 5 பத்தாயிரம் + 6 ஆயிரம் + 8 நூறு + 3 ஒன்று

1 567 =

2 891 =

3 3 627 =

4 85 369 =

ஆ. கீழ்க்காணும் எண்களை இலக்க மதிப்பிற்கேற்ப பிரித்து எழுதுக:

எ.கா:

87 042 = 80 000 + 7 000 + 40 + 2

1 874 =

2 249 =

3 5 781 =

4 27 064 =